## தமிழ்நாட்டின் உரிமைகளைக் காக்க – விடியலைத் தொடர – உதயசூரியன் மீண்டும் உதிக்க –

## வெற்றிக்குக் கட்டியம் கூறிட கழக மாநில மாநாடு!

# திருச்சி குலுங்கிட லட்சக்கணக்கானோர் திரண்டனர்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் போர் முரசம்!

**திருச்சி, மார்ச் 10 -**

**தமிழ்நாட்டின் உரிமைகளைக் காக்க, விடியலைத் தொடர, உதயசூரியன் மீண்டும் உதிக்க, வெற்றிக்குக் கட்டியம் கூறிட தீரர்கள் கோட்டமாம் திருச்சி சிறுகனூரில் மாபெரும் மாநில மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் தமிழ்நாடு முழுவதிலுமிருந்தும் லட்சக்கணக்கான கழகத் தோழர்கள் திரண்டனர். இம்மாபெரும் மாநாட்டில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் போர் முரச அறைகூவல் விடுத்து உரையாற்றினார்.**

திருச்சி சிறுகனூரில் நேற்று (9ம் தேதி) தி.மு.க.வின் பிரமாண்ட 12வது மாநில மாநாடு நடைபெற்றது. மாநாடு என்றாலே தி.மு.க. தான் என்பதை நிரூபிக்கும் வகையில் கடந்த காலங்களில் தி.மு.க.மாநாடுகள் நடந்துள்ளன. தி.மு.க. மாநில மாநாடுகளின் வரலாறும், அவற்றின் அரசியல் தாக்கமும் எப்போதும் கவனத்தை பெற்று வந்துள்ளன. இந்த மாநில மாநாடுகள், கட்சியின் அரசியல் திசையை நிர்ணயிக்கும் முக்கிய மேடையாகவும், தொண்டர்களை ஒருங்கிணைக்கும் பெரிய சக்தியாகவும் இருந்து வந்துள்ளன. தி.மு.க. துவங்கப்பட்ட 1949ம் ஆண்டுக்கு பின்னர் நடத்தப்பட்டு வரும் இந்த மாநாடுகள், கழகத்தின் வளர்ச்சியை வலுப்படுத்தியதுடன், அமைப்பு ரீதியான மிகப்பெரிய இடத்தை அடைவதற்கு உதவியுள்ளது. 1951ம் ஆண்டு சென்னையில் பேரறிஞர் அண்ணா தலைமையில் முதல் மாநில மாநாடு நடந்தது.

### திராவிட இயக்கத்தின் எழுச்சி!

அதில், கட்சியின் கொள்கைகள், அமைப்பு விரிவாக்கம் மற்றும் சமூகநீதி அடிப்படையிலான அரசியல் நோக்கங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன. இதையடுத்து 1956ம் ஆண்டு திருச்சியில் நடந்த இரண்டாவது மாநில மாநாடு தி.மு.க.வுக்கு மிகப் பெரும் திருப்புமுனையை அளித்தது. அதில் தான், 1957ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் போட்டியிட வேண்டுமா? வேண்டாமா? என்பது குறித்து தொண்டர்களிடம் நேரடி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் 56,942 தொண்டர்கள் ஆதரவாகவும், 4,203 பேர் எதிராகவும் வாக்களித்தனர். இதன் மூலம் தி.மு.க. தேர்தலில் நேரடியாக களம் காணும் முக்கிய முடிவு எடுக்கப்பட்டது. இந்த முடிவுதான் பின்னர் தமிழ்நாடு அரசியலில் திராவிட இயக்கத்தின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் வழிவகுத்தது.

அடுத்து 1961ம் ஆண்டு மதுரையில் அண்ணா தலைமையில் மூன்றாவது மாநில மாநாடு நடந்தது. இந்த மாநாட்டில் கட்சியின் சமூக நீதி, மொழி உரிமை மற்றும் மாநில உரிமைகள் குறித்த தீர்மானங்கள் வலியுறுத்தப்பட்டன. 1966ம் ஆண்டு சென்னை நகரில் நடந்த நான்காவது மாநில மாநாடு, 1967 சட்டமன்றத் தேர்தலுக்கான அரசியல் திட்டங்களை வகுக்கும் முக்கிய களமாக காணப்பட்டது. அந்த மாநாட்டை தொடர்ந்து நடந்த தேர்தலில் தான் தி.மு.க. தலைமையிலான கூட்டணி மாபெரும் வெற்றி பெற்று, முதன் முறையாக தமிழ்நாட்டில் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தது. 1975ம் ஆண்டு கோவையில் நடந்தது 5வது மாநில மாநாடு. அப்போது முதல்வராக இருந்த கலைஞர் தலைமையில் இந்த மாநாடு நடந்தது.

### கூட்டணி அரசியல் வளர்ச்சி!

அதில், சட்டமன்றத் தேர்தலுக்கான அரசியல் வலிமையை வெளிப்படுத்துவதற்கான நிகழ்வாக அனைவராலும் பார்க்கப்பட்டது. 1990ம் ஆண்டு பிப்ரவரி 9, 10, 11 ஆகிய நாட்களில் திருச்சியில் நடந்த ஆறாவது மாநில மாநாடு, அன்றைய அரசியல் சூழ்நிலையிலும், எதிர்க்கட்சி காலத்திலும் கட்சியின் அமைப்பை வலுப்படுத்த முக்கியமானதாக இருந்தது. தொடர்ந்து 1993ம் ஆண்டு கோவையில் நடந்த 7வது மாநில மாநாடு, தி.மு.க.வின் கொங்கு மண்டல அளவிலான வளர்ச்சிக்கு பெரிதும் உதவியது. 1996ம் ஆண்டு திருச்சியில் கலைஞர் தலைமையில் நடந்த 8வது மாநில மாநாடு தேசிய மற்றும் மாநில அரசியல் பரிமாற்றங்களின் சூழலில் நடந்தது எனலாம். 1990ம் ஆண்டுகளின் தொடக்கத்தில் இந்திய அரசியலில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்கள்,



கூட்டணி அரசியல் வளர்ச்சி போன்ற அம்சங்கள் அந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டன.

அதன் பின்னர் 2006ம் ஆண்டு மீண்டும் திருச்சியில் கலைஞர் தலைமையில் 9வது மாநில மாநாடு 1996ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலுக்கு முன் நடந்த முக்கிய அரசியல் நிகழ்வுக்கான மாநாடு என கூறலாம். அந்த தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி 173 இடங்களில் வெற்றி பெற்று தமிழ்நாட்டில் ஆட்சியை அமைத்தது. 2014ம் ஆண்டு திருச்சியில் கலைஞர் தலைமையில் நடந்த 10வது மாநில மாநாடு சமூகநலத்திட்டங்கள், ஏழை, எளிய மக்களுக்கான நலவாழ்வு திட்டங்கள் மற்றும் தேர்தல் வாக்குறுதிகளை ஆகியவற்றை மையப்படுத்தியது. அந்த மாநாட்டில் அறிவிக்கப்பட்ட பல திட்டங்கள் பின்னர் அரசியல் பிரச்சாரத்தின் முக்கிய தேர்தல் வாக்குறுதிகளாயின.

மீண்டும் 2021ம் ஆண்டு திருச்சியில் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடந்த 11வது மாநில மாநாடு மத்திய அரசியல் சூழ்நிலையை விமர்சித்தும், கட்சி அமைப்பை மறுசீரமைக்கவும் பயன்படுத்தப்பட்டது.

### திருச்சி சிறுகனூரில் 12-வது மாநில மாநாடு!

இந்நிலையில் தீரர் கோட்டமாம் திருச்சியில் திராவிட அரசியல் பேரியக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் “ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்” என்கிற தேர்தல் சிறப்பு மாபெரும் நிர்வாகிகள் மாநாடு நேற்று பிரம்மாண்டமாக நடைபெற்றது. 10 லட்சத்திற்கும் மேற்பட்ட கருப்புசிவப்பு படையினர் பங்கேற்ற இந்த மாநாட்டில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு எழுச்சியுரையாற்றினார்.

தி.மு.க. மாநில மாநாடுகளின் வரலாறும், அவற்றின் அரசியல் தாக்கமும் எப்போதும் கவனத்தை பெற்று வந்துள்ளன. இந்த மாநில மாநாடுகள், கட்சியின் அரசியல் திசையை நிர்ணயிக்கும் முக்கிய மேடையாகவும், தொண்டர்களை ஒருங்கிணைக்கும் பெரிய சக்தியாகவும் இருந்து வந்துள்ளன என்றால் மிகையாகாது. தி.மு.க. தொடங்கப்பட்ட 1949ம் ஆண்டுக்கு பின்னர் நடத்தப்பட்டு வரும் இந்த மாநாடுகள், தி.மு.க.வின் வளர்ச்சியை வலுப்படுத்தியதுடன், அமைப்பு ரீதியான மிகப்பெரிய இடத்தை அடைவதற்கு உதவியுள்ளது.

அதுவும் திருச்சியில் மாநாடு என்றாலே தி.மு.க.வின் வரலாற்றில் திருப்புமுனை தான்.

இந்நிலையில், திருச்சி மாவட்டம் சிறுகனூரில், சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, “ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்” என்ற தலைப்பில், தி.மு.க.வின் 12வது மாநில மாநாடு நேற்று பிரம்மாண்டமாக நடைபெற்றது. தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட கருப்புசிவப்பு உடன்பிறப்புகள் பங்கேற்றனர். மாநாட்டிற்கான ஏற்பாடுகளை தி.மு.க. முதன்மைச் செயலாளரும், அமைச்சருமான கே.என்.நேரு எழுச்சியோடும் ஏற்றத்தோடும் செய்திருந்தார்.

All Roads Lead to Rome என்று சொல்வார்கள். எல்லாச் சாலைகளும் ரோமாபுரி நோக்கிச் செல்கின்றன என்பது போல, எல்லாச் சாலைகளும் இப்போது மலைக் கோட்டை மாநகராம் திருச்சியை நோக்கியே பயணித்தன.

மூன்று லட்சம் நாற்காலிகள் தொண்டர்கள் அமரும் வகையில் போடப்பட்டிருந்தன. இரண்டு பக்கமும் சுமார் 7 லட்சம் பேர் நின்று கொண்டு மாநாட்டை ரசிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவர்களுக்கான குடிநீர் வசதி மற்றும் கழிவறை வசதியும் தனித்தனியாக செய்யப்பட்டது. இரண்டு பக்கமும் 10 லட்சம் லிட்டர் தண்ணீர் கொள்ளளவு கொண்ட தொட்டிகள் அமைக்கப்பட்டிருந்தன. 24 ஆயிரம் வாகனங்கள் வருகை தந்தன. மின்விளக்கு வசதி, பார்க்கிங் வசதிகள் செய்யப்பட்டன. மாலை 3 மணிக்கு தொடங்கிய இந்த மாநாட்டில் முன்னதாக இசையமைப்பாளர் தேவா இசை நிகழ்ச்சியும், இறையன்பன் குத்தூஸ் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. சிறுகனூருக்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், விழா மேடை அருகே இரு வண்ணக் கொடியை ஏற்றி வைத்து தொண்டர்களின் வரவேற்பை பெற்றார்.


திருச்சியில் எங்கு நோக்கினும் கழகத் தோழர்களும் கழகக் கொடிகளுமே தென்பட்டன. தமிழ்நாடு முழுவதிலுமிருந்தும் கழகத் தோழர்கள் கடலெனத் திரண்டனர்.

இம்மாபெரும் மாநாட்டில் உரையாற்றிய கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் உரிமைகளைக் காத்திட, விடியலைத் தொடர்ந்திட, உதயசூரியன் மீண்டும் உதித்திட போர் முரசம் கொட்டினார்.





## வெல்வோம் ஒன்றாக!



---

கிரிக்கெட் : இந்திய அணி ஆதிக்கத்துடன்

## 3வது முறையாக உலகக் கோப்பையை வென்றதற்கு வாழ்த்துகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!




**சென்னை, மார்ச் 10 -**

**இந்திய அணி ஆதிக்கத்துடன் கிரிக்கெட் போட்டியில் மூன்றாவது முறையாக உலகக் கோப்பையை வென்ற இந்திய வீரர்களுக்கு வாழ்த்துகள் என்று சமூக வலைதளத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.**

ஐ.சி.சி. டி20 உலகக் கோப்பை வென்றுள்ள இந்திய அணிக்கு வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

ஆடவருக்கான ஐ.சி.சி. டி20 உலகக் கோப்பையை அபாரமாக வென்றுள்ள இந்திய அணியினருக்கு எனது பாராட்டுகள்.

கடைசி 3 போட்டிகளிலும் மனதுக்குக் களிப்பூட்டும் வகையில், மிகுந்த உறுதியோடும், அமைதியோடும் ‘சேட்டன்’ சஞ்சு சாம்சன் விளையாடி, முக்கியமான போட்டிகளில் அணியின் வெற்றிக்குப் பங்காற்றியிருக் கிறார்.

தொடர் முழுவதும் தொடர்ச்சியாகச் சிறப்பாகச் செயல்பட்டு, இந்திய அணி ஆதிக்கத்துடன், மூன்றாவது முறையாக டி20 உலகக் கோப்பையை வென்ற பெருமை மிகு தருணத்துக்கு இட்டுச் சென்ற அனைத்து வீரர்களுக்கும் எனது வாழ்த்துகள்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

தி.மு.க. 12வது மாநில மாநாட்டில் பங்கேற்கச் சென்ற

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு திருச்சியில் கழகத்தினர் உற்சாக வரவேற்பு!

### அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் கழக முன்னணியினர் பங்கேற்பு!

திருச்சி, மார்ச் 10 –

“ஸ்டாலின் தொடரட்டும்; தமிழ்நாடு வெல்லட்டும்!” திருச்சியில் தி.மு.க.வின் 12வது மாநில மாநாடு.

மாநாட்டில் பங்கேற்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சி சென்றடைந்தார்,

திருச்சி விமான நிலையத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களை, தி.மு.க.வினர் உற்சாகமாக வரவேற்றனர்.

தி.மு.க. மாநில மாநாட்டில் பங்கேற்பதற்காக திருச்சி சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

சென்னையிலிருந்து விமானம் மூலம் திருச்சி வந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

துணைப் பொதுச் செயலாளர்கள் திருச்சி சிவா, ஆ.ராசா, கனிமொழி கருணாநிதி, மு.பெ.சாமிநாதன், முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.